சின்னாளபட்டி சேரன் வித்யாலயா மேல்நிலைப்பள்ளியில்

தேசிய அளவிலான ஹேண்ட்பால் போட்டியில் பங்கேற்கும் தமிழக அணிக்கான 19 வயதுக்குட்பட்ட வீராங்கனைகள் தேர்வு

சின்னாளபட்டி, மார்ச்.16– சின்னாளபட்டி சேரன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் தேசிய அளவிலான ஹேண்ட்பால் போட்டியில் பங்கேற்கும் தமிழக அணிக்கான 19 வயதுக்குட்பட்ட மாணவிகள் அணி ,பெண்களுக்கான அணி (வீராங்கனைகள்) தேர்வு நடைபெற்றது. 32 மாவட்டங்களிலிருந்து வந்திருந்த தமிழக அணிக்களுக்கான வீராங்கனைகள் போட்டியில் பங்கேற்றனர். ஹேண்ட்பால் சங்க மாநில பொதுச் செயலாளர் எம். சிவக்குமார் தலைமையில் தமிழக அணிக்களுக்கான வீராங்கனைகள் தேர்வு நடைபெற்றது.

அகில இந்திய அளவில் 19 வயதிற்குட்பட்ட வீராங்கனைகளுக்கான தேசிய அளவிலான ஹேண்ட்பால் போட்டிகள் உத்திரபிரதேச மாநிலம் லக்னோவில் 26.03.2025 முதல் 30.3.25 வரை 4 நாட்கள் நடைபெறுகிறது. இதுபோல உத்தரபிரதேசம் அலிகர் மாவட்டத்தில் பெண் வீராங்கனைகளுக்கான போட்டிகள்31.3.2025 முதல் 5.4.2025 வரை நடைபெறுகிறது. இதில் பங்கேற்கும் தமிழக அணிக்கான ஹேண்ட்பால் விளையாட்டு போட்டியில் பங்கேற்கும் இரு அணிகளுக்கான வீராங்கனைகள் தேர்வு சின்னாளபட்டி பைபாஸ் சாலையில் உள்ள சேரன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் 15.3.2025 சனிக்கிழமை காலை 9 மணியளவில் நடைபெற்றது.

தமிழ்நாடு ஹேண்ட்பால் கழகத்தின் மாநிலத் தலைவர் இராமசுப்ரமணியம் அவர்களின் ஆலோசனையின் பேரில் நடைபெற்ற வீராங்கனைகள் தேர்வு முகாமிற்கு தமிழ்நாடு ஹேண்ட்பால் கழகத்தின் மாநில பொதுச் செயலாளர் எம்.சிவகுமார் தலைமை தாங்கினார்.

சின்னாளபட்டி சேரன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி முதல்வரும், அறங்காவலருமான என். திலகம் மதுரை மாவட்ட ஹேண்ட்பால் சங்க தலைவர் கண்ணன், சேலம் மாவட்ட செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, தேனி மாவட்ட செயலாளர் விக்னேஷ், ஈரோடு மாவட்ட பொறுப்பாளர் ராஜா, மாநில விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் ஹேண்ட்பால் பயிற்சியாளர்கள் திருவண்ணாமலை சர்மிளா, காஞ்சிபுரம் ஜோசப், பெரம்பலூர் குழந்தைபாக்கியம், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

திண்டுக்கல் மாவட்ட ஹேண்ட்பால் சங்க ஒருங்கிணைப்பாளர்; ஓ.பி. பாரதிராஜா வரவேற்றார் முகாமில் விளையாட்டு வீராங்கனைகள் மத்தியில் பேசிய தமிழ்நாடு ஹேண்ட்பால் கழகத்தின் மாநில பொதுச் செயலாளர் எம்.சிவகுமார் நான் விளையாட்டு துறையில் ஈடுபாடுடன் செயற்பட்டதால் எனக்கு மத்திய அரசு பணியானரயில்வே துறையில் வேலை கிடைத்தது. என்னை போல பல மாணவர் ,மாணவியர்கள் அரசு துறையில் பணியாற்ற வேண்டும் என்பதற்காகவே ஹேண்ட் பால் போட்டிக்கான விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை தேர்வு செய்து வருகிறேன்.

நீங்கள் போடும் ஒவ்வொரு கோளும் உங்களோட வேலை வாய்ப்பை உறுதி செய்யும் இதை வீராங்கனைகள் உணர்ந்து கொண்டால் போதும் வெற்றி உங்களை எளிதாக தேடிவரும் என்றார்.

தமிழக விளையாட்டு மேம்பாட்டுத்துறைஅமைச்சர்உதயநிதி ஸ்டாலின் விளையாட்டுத்துறையை பெருமைபடுத்தும் வகையில் அரசுப்பணியில் மூன்று சதவிகிதம் உள் ஒதுக்கீடு வழங்கியதால் இன்று ஒவ்வொரு வருடமும் நூற்றுக்கணக்கான விளையாட்டு வீரர்கள் அரசுப் பணிக்கு செல்லும் நிலைமை உருவாகி உள்ளது.

இந்திய அளவில் தமிழக விளையாட்டுத்துறை முதல் இடத்தை பெற்றுவருகிறது என்றார். நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் லட்சம் நிறைவேற கடின உழைப்புடன் திறமையாக விளையாடி அரசுப் பணிக்கு செல்ல வேண்டும் என வாழ்த்தினார். 32 மாவட்டங்களிலிருந்து சுமார் 120க்கும் மேற்பட்ட ஹேண்ட்பால் விளையாட்டு வீராங்கனைகள் இரு பிரிவினிலும் பங்கேற்றனர். விளையாட்டு வீராங்கனைகள் தேர்வு செய்யும் முகாமிற்கான ஏற்பாடுகளை தமிழக ஹேண்ட்பால் விளையாட்டு கழகமும் திண்டுக்கல் மாவட்ட ஹேண்ட்பால் அசோசியேஷனும் சேரன் பள்ளி நிர்வாகமும் சிறப்பாக செய்திருந்தனர்.

விருதுநகர் செந்திக்குமார நாடார் கல்லூரியில் 78வது ஆண்டு விழா

விருதுநகர், மார்ச்.16– விருதுநகர் செந்திக்குமார நாடார் கல்லூரியில் 78வது ஆண்டு விழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. கணினி அறிவியல் துறைத் தலைவர் முனைவர் டி.கதிர்வளவக்குமார் வரவேற்றார். கல்லூரித் தலைவர் எம். சம்பத்குமார் தலைமை வகித்தார். உப தலைவர்கள் ஆர். ராமசாமி, எஸ். டெய்சிராணி, செயலாளர் ஜே. மகேஷ் பாபு, பொருளாளர் எம். டி. குமரன், சுயநிதி பாடப் பிரிவு ஒருங்கிணைப்பாளர் முனைவர் அ.காளிதாஸ் மற்றும எம்.எஸ்.பி. நாடார் கல்வியல் கல்லூரி முதல்வர் முனைவர் பி.சுரேஷ் குமார் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். 2024 2025ம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையைக் கல்லூரி முதல்வர் முனைவர் அ.சாரதி சமர்ப்பித்தார். சிறப்பு விருந்தினராக மதுரை சிவஜோதி மருத்துவமனையின் தலைமை மருத்துவர் டாக்டர் எம். சந்தன்குமார் கலந்து கொண்டு மாணவர்களிடையே பேசுகையில், “கண்டிப்பு மிகுந்த ஆசிரியரிடம் கற்ற கல்வி நம்மை வாழ்வில் முன்னேற்றம் அடைய செய்யும். பெற்றோர்களும் மாணவர்களைக் கண்டிப்புடன் நடத்துவது நற்செயலாகும். வகுப்பறையில் நாம் கற்ற கல்வியை அடுத்த நிலைக்கு கொண்டு செல்ல காரணமாய் இருப்பவர்கள் ஆசிரியர்களே, அந்த ஆசிரியர்களின் கண்டிப்புகள்தான் நம்மை வெற்றி பாதையில் முன்னெடுத்துச் செல்ல வழிவகை செய்யும். நான் இன்று இந்நிலைமை அடைவதற்கு கண்டிப்புடன் இருந்த ஆசிரியர்களும் பெற்றோருமே காரணமாவர். மாணவர்களாகிய நீங்கள் வாழ்வில் நன்றி, வரவேற்கிறேன், மன்னித்து விடுங்கள் என்ற வார்த்தைகளைச் சொல்ல கற்றுக் கொள்ளுங்கள்” என்று பேசினார். 2024–2025ஆம் கல்வியாண்டிற்கான சிறந்த பேராசிரியர்களாக நுண்கலை மன்ற பொறுப்பாளர், தமிழ்த் துறை இணைப் பேராசிரியர் முனைவர் த.செல்வசங்கரன், சுயநிதிப் பாடப்பிரிவில் இயற்பியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் பி.லாரன்ஸ் மற்றும் சிறந்த ஆசிரியரல்லாத அலுவலர்கள் பி.சுந்தரமகாலிங்கம், எம்.மாரிக்களி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டு நிர்வாகத்தினரால் தங்க நாணயமும் சான்றிதழும் வழங்கி சிறப்பிக்கப்பட்டனர். 2023–2024ஆம் கல்வியாண்டு கல்வியில் முதலிடம் பெற்ற மாணவர்களுக்குப் பல்வேறு சமூகப் பெரியோர்களால் உருவாக்கப்பட்ட அறக்கட்டளை சார்பில் தங்க நாணயமும் சான்றிதழும் வழங்கப்பட்டது. ஆராய்ச்சியில் முனைவர் பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கும், நாட்டு நலப்பணித் திட்டம், தேசிய மாணவர் படை, இளஞ்செஞ்சிலுவை சங்கம், செஞ்சுருள் சங்கம், நூலகத்தைத் திறம்பட பயன்படுத்தியோர், விளையாட்டில் சாதித்தவர்கள் மற்றும் கல்லூரியில் பல்வேறு பணிகளில் தங்களை அர்ப்பணித்த மாணவர்கள் அனைவருக்கும் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டது. மாணவர்களின் இசை மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடைப்பெற்றது. நிறைவாக கணினி அறிவியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் ர.பழனியப்பன் நன்றி கூறினார்.

ராமேஸ்வரத்தில், கச்சத்தீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவிற்கு செல்லும் பக்தர்களை வழியனுப்பும் நிகழ்ச்சி

ராமநாதபுரம், மார்ச்.16– ராமநாதபுரம் மாவட்டம், ராமேஸ்வரத்தில், கச்சத்தீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவிற்கு செல்லும் பக்தர்களை வழியனுப்பும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜி.சந்தீஷ், முன்னிலையில் பக்தர்கள் செல்லும்

படகுகளை கொடியசைத்து வழியனுப்பி வைத்து தெரிவிக்கையில், கட்சத்தீவில் உள்ள புனித அந்தோனியார் ஆலய திருவிழா இன்றும், நாளையும் நடைபெறுகின்றது. இந்த விழாவில் பங்கேற்பதற்காக இந்திய அரசின் அனுமதியுடன் தமிழ்நாடு அரசு வழிகாட்டுதலின்படியும் பல்வேறு பகுதிகளில் இருந்து சுமார் 3,424 பேர் விண்ணப்பித்து இருந்தனர். இன்று காலை முதல் 78 விசைப்படகுகள் மற்றும் 22 நாட்டுப்படகுகளில் பக்தர்கள் செல்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள ப்பட்டுள்ளன. பயணம் செல்லும் படகுகள் அனைத்தும் முறையான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, மாவட்ட நிர்வாகம் சார்பாக இந்திய கடற்படை, கடலோர பாதுகாப்பு குழுமம், சுங்கத்துறை, இம்மிகிரேசன், காவல்துறை, மீன்வளத்துறை, வருவாய்த்துறை உள்ளிட்ட அலுவலர்கள் இந்தப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் கச்சத்தீவு சென்றுவரும் அனைவருக்கும் தேவையான அடிப்படை வசதிகள், மாவட்ட நிர்வாகத்தால் செய்து தரப்பட்டுள்ளன. அனைவருக்கும் லைப் ஜாக்கெட் வழங்கப்பட்டுள்ளது. கடலோர காவல் படை மற்றும் காவல்துறை மூலம் அனைவரும் கண்காணிக்கப்பட்டு கச்சத்தீவு நிகழ்ச்சி முடிந்து திரும்பும் வரை உரிய வசதிகள் அனைத்தும் செய்து தரப்பட்டுள்ளன. மேலும் கச்சத்தீவு சென்றுவரும் பக்தர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் கிடைத்திட ஏதுவாக ஏற்கனவே அனைத்துத்துறை அலுவலர்களுடன் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. இது தவிர மருத்துவக்குழுக்கள் அமைக்கப்பட்டு பயணிகளுடன் சென்று அவர்களுக்கு தேவையான மருத்துவ உதவிகளை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு படகுகளுக்கும் தேவையான மருந்து, மாத்திரைகள் மருத்துவத்துறையின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. எனவே கச்சத்தீவு புனித அந்தோனியரர் ஆலய திருவிழாவிற்கு சென்று வரும் பக்தர்கள் அரசு வழிகாட்டுதல்களை பின்பற்றி திருவிழாவில் பங்கேற்று வரவேண்டும் எனவும், பயணம் மேற்கொள்ளும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் என மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கடலோர காவல்படை அதிகாரி வினாய்குமரர், துணை ஆணையர் (சுங்கம்) பிரகாஷ், ராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் ராஜமனோகரன், மீன்வளத்துறை துணை இயக்குநர்கள் பிரபாவதி

கோபிநாத் அவர்கள், உதவி இயக்குநர்கள் ஜெயக்குமரர், சிவக்குமரர், ராமேஸ்வரம் நகராட்சி ஆணையர் கண்ணன், ராமேஸ்வரம் நகராட்சி பொறியாளர் பாண்டீஸ்வரி அவர்கள், வட்டாட்சியர் ஜபரர் மற்றும் விழாக்குழுவினர் பலர் உடனிருந்தனர்.

கல்வி இன்டர்நேஷனல் பள்ளி– மொபிசிப் இணைந்து வேலைவாய்ப்பு இயக்கம்

சோழவந்தான், மார்ச்.16– கல்வி இன்டர்நேஷனல் பள்ளி மற்றும் அமெரிக்காவின் மொபிசிப் Mobicip நிறுவனம் இணைந்து வேலைவாய்ப்பு இயக்கம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கல்வி குழுமத்தின் தலைவர் செந்தில் குமார் தலைமையேற்றார். மொபிசிப் Mobicip நிறுவனத்தின் முதன்மை அதிகாரிகள் சுரேன் ராமசுப்பு மற்றும் பிரதீப் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் கல்வி பள்ளியின் 12 மாணவர்கள் மொபிசிப் Mobicip நிறுவனத்தில் நேரடியாக தேர்வு செய்யப்பட்டு வேலைவாய்ப்பு ஆணைகள் பெற்றனர்.

பள்ளியில் படித்துக் கொண்டே நிறுவனத்தில் பணி புரிவர். இதன் மூலம் மாணவர்கள் மென்பொருள் மேம்பாடு, செயற்கை நுண்ணறிவு (AI), வலை மேம்பாடு, செயலி மேம்பாடு போன்ற துறைகளில் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்துள்ளது. கல்வியின் தரத்தை உலகளவில் உயர்த்தும் வகையில் பல சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து மாணவர்களுக்கு சிறந்த வேலை வாய்ப்புகளை வழங்க பாடுபட்டு வருகிறோம். மொபிசிப் Mobicip நிறுவனத்துடன் இணைந்து இந்த நிகழ்ச்சி நடத்தியதற்கு பெருமைப்படுகிறோம். என்று பள்ளி தலைவர் செந்தில் குமார் தெரிவித்தார்.

திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் செயல்படும் சகி பெண்களுக்கான ஒருங்கிணைந்த சேவை மையத்தினை திருவாரூர் மாவட்ட கலெக்டர் மோகனச்சந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தேனி மாவட்டம் தேனி ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட அரண்மனைப்புதூர் ஊராட்சி பகுதிகளில் நடைபெற்று வரும் கலைஞர் கனவு இல்லம் கட்டுமான பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்ஜீத் சிங் வெள்ளிக்கிழமை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார் உடன் தேனி ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மைதிலி சரவணன் அரண்மனை, புதூர் ஊராட்சி செயலர் கே பாண்டி மற்றும் அரசு அதிகாரிகள் உடன் இருந்தனர்

நாகப்பட்டினத்தில் புதிய பீச்யில் பீச் வாலிபால் போட்டிகள் நடைபெற்றன. போட்டிகளில் 25 அணிகள் பல்வேறு ஊர்களில் இருந்து வீராங்கனைகள் கலந்துகொண்டனர். பீச் வாலிபால் சங்க தலைவர் மோகன்தாஸ், செயலாளர் கண்ணன் ஆகியோர் விரிவான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

Protium

புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட்

(முன்னர் குரோத் சோர்ஸ் பைனான்ஷியல் டெக்னாலஜிஸ் லிமிடெட்)

பதிவு அலுவலகம்: நிர்லான் நாலெட்ஜ் பார்க் (NKP) B– 2, ஏழாவது தளம், பஹாடி கிராமம், ஆப். மேற்கு விரைவு நெடுஞ்சாலை, காமா இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கோரேகான் (கி), மும்பை, மகாராஷ்டிரா 400063

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

2002ம் வருடத்திய கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் மற்றும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்க) விதிகள், 2002ன் விதி 8 (6)ன் கீழ் அசையா சொத்துகளின் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு. கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்கள் ஈடுபெற்ற கடன் வழங்கியவரிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ளன என்று பொது மக்களுக்கும் பொதுவாகவும், கடன்தாரர் / உடன் கடன்தாரர் / அடமானதாரருக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது. அந்த சொத்து புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் ஆக்கப்பூர்வ சுவாதீனம் எடுக்கப்பட்டுள்ளது (இனிமேல் புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட் என குறிப்பிடப்படும்). ஈடுபெற்ற சொத்துக்கள் மின்னணு ஏலத்தின் மூலம் "எங்கே உள்ளதோ அங்கேயே", "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "எந்த மாற்றமில்லாமல்" என்ற அடிப்படையில் விற்கப்படும். http://bankauctions.in/ என்ற இணையதளம் மூலம் பொது மின்னணு ஏலத்தை நடத்த உள்ளோம் என்று இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

1.கணக்கு எண் 2.கடன்தாரர், உடன் கடன்தாரர் 3. அடமானதாரர் பெயர்	4. கோரிக்கை அறிவிப்பு தேதி 5. 13(2)ன் கீழ் கோரிக்கை அறிவிப்பின்படி தொகை 6. அடையாள சுவாதீனத் தேதி 7. அன்றைய தேதியிலான தொகை	8. சொத்து/சொத்துகள் குறித்த விவரம்	9. ரிசர்வ் விலை 10.டேவணித் தொகை டெபாசிட் 11. ஏல அதிகரிப்பு தொகை (ரூபாயில்)	12. மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், 13. EMDஐ சமர்ப்பிக்க கடைசித் தேதி 14. ஆய்வுத் தேதி
1. GS087EEL2275155, 2.(a) அஞ்சனா டிரேடர்ஸ் சார்பில் அதன் உரிமையாளர் செண்பககுமார் பி (b) செண்பககுமார் பி, (c) மாணிக்கம், (d) டி பொன்னம்மாள் அனைவரது வசிப்பிடம்: 4/141 கிழங்கு மெயின் ரோடு நைனாராகரம் தென்காசி, நா, திருநெல்வேலி, தமிழ்நாடு 627804 மேலும், சர்வே எண். 1395, மனை எண். 39, கதவு எண்.96/39, 1, சர்வே எண். 1396 1404 TSN 86 மேற்கு பகுதி வார்டு எண். பி தொகுதி. 37, தொன்னல் நகர் உச்சிமஹாலி 1வது தெரு, தென்காசி கிராமம், தென்காசி இணை எண். 2 சார் பதிவு அலுவலகம், தென்காசி நகராட்சி, திருநெல்வேலி, தமிழ்நாடு 627 814. மேலும்: கீழப்புலியூர் குணராமநல்லூர் தென்காசி 1வது தெரு, திருநெல்வேலி, தமிழ்நாடு 627814	4. தேதி: அக்டோபர் 04, 2024, 5. அக்டோபர் 03, 2024 அன்று ரூ.2738774.52/- (ரூபாய் இருபத்தேழு லட்சத்து முப்பத்தெட்டாயிரத்து எழுநூற்று எழுபத்து நான்கு மற்றும் ஐம்பத்திரெண்டு பைசா மட்டும்) மற்றும் அக்டோபர் 03, 2024 முதல் 18% கூடுதல் வட்டியுடன் எங்கள் அறிவிப்பில் கோரப்பட்டுள்ளபடி முழுத் தொகையும் பிற கட்டணங்களுடன் செலுத்தும் வரை, இந்த அறிவிப்பின் தேதியிலிருந்து 60 நாட்கள் சட்டப்பூர்வ காலத்திற்குள், 6. ஜனவரி 23, 2025, 7. மார்ச் 15, 2025 அன்று ரூ.2968013.50/- (ரூபாய் இருபத்தொன்பது லட்சத்து அறுபத்தெட்டாயிரத்து பதிமூன்று மற்றும் ஐம்பது பைசா மட்டும்)	a. அசையா சொத்துகள் : இந்த சொத்தானது தென்காசி பதிவு மாவட்டம், தென்காசி கிராமம், தென்காசி இணை II, சார் பதிவு எல்லை, தென்காசி நகராட்சி, அயன் புஞ்சை சர்வே எண், 1395ல் உள்ள 3 ஏக்கர் 23 சென்ட், சர்வே எண். 1396ல் உள்ள 2 ஏக்கர் 47 சென்ட், சர்வே எண். 1404ல் உள்ள 2.56 ஏக்கர், மேற்குப் பகுதியில் 39 சென்ட், ஆக மொத்தம் 6 ஏக்கர் 9 சென்ட் நிலம் வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு தென்றல் நகர் என்ற பெயரில் லேஅவுட்டாக மாற்றப்பட்டுள்ளது. இதில் மனை எண்.39, சர்வே எண். 1395, இதில் மேற்குப் பக்கத்தில் தெற்குப் பக்கப் பகுதி: இப்போது துணைப் பிரிவின்படி டி.எஸ். வார்டு பி, பிளாக் 37, டி.எஸ். எண். 86ல் உள்ள 1264.03 சதுர அடி (117.43 சதுர மீட்டர்) அளவிலான நிலம் காலியாக உள்ளது மற்றும் எல்லைகள் : வடக்கு: திருமதி பட்டம்மாளுக்கு சொந்தமான நிலம், தெற்கு: 18 அடி அகல கிழக்கு மேற்காக பொதுப் பாதை, கிழக்கு: மனை எண். 38, மேற்கு; 23 அடி அகல பொதுப் பாதை, விஸ்தீரணம் : கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கத்தில்: 34.50 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கத்தில்: 36.50 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கத்தில்: 36.50 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கத்தில்: 36.25 அடி நிலம் 1264 சதுர அடி (117.43 சதுர மீட்டர்). கட்டிடம், மேம்பாடுகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்து உரிமைகளுடன் சேர்த்து.	9. ரூ. 31,00,000/- (முப்பத்தொரு லட்சம் மட்டும்) 10. ரூ.3,10,000/- (மூன்று லட்சத்து பத்தாயிரம் மட்டும்) 11. (ஏலம் அதிகரிப்பு மதிப்பு: ரூ.5,000/-)	12. 16 ஏப்ரல் 2025 அன்று காலை 11:00 மணி முதல் மதியம் 2:00 மணி வரை (ஒவ்வொன்றும் 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்புடன்) 13. 15 ஏப்ரல் 2025 அன்று மாலை 5:00 மணி வரை. 14. 4 ஏப்ரல் 2025 அன்று காலை 11:00 மணி முதல் மாலை 5:00 மணி வரை

1. ஆர்வமுள்ள அனைத்து பங்கேற்பாளர்களும் / ஏலதாரர்களும் https://bankauctions.in & https://protium.co.in/ என்ற இணையதளத்தைப் பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் விவரங்கள், உதவி, நடைமுறை மற்றும் மின்னணு ஏலம் குறித்த ஆன்லைன் பயிற்சிக்கு, வருங்கால ஏலதாரர்கள் திரு. நிதேஷ் டி பவார் அவர்களை தொலைபேசி எண். 8142000725/ 8142000066.email id: nitesh@bankauctions.in / info@bankauctions.in-ல் தொடர்பு கொள்ளலாம்.

• விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பற்றிய கூடுதல் விவரங்களுக்கு, மின்னணு ஏலத்தில் பங்கேற்க https://bankauctions.in மற்றும் https://protium.co.in/ ஐப் பார்க்கவும்.

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்க) விதிகள், 2002ன் விதி 8(6)/ விதி 9 (1)ன் கீழ் இது ஒரு சட்டப்பூர்வ 30 நாட்கள் விற்பனை அறிவிப்பு ஆகும்,

தேதி : 16.03.2025
இடம் : திருநெல்வேலி, தமிழ்நாடு

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
புரோடியம் ஃபைனான்ஸ் லிமிடெட்